பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2022

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (‘‘கம்பனி’’) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியானது முழுமையாக பெறுமானத்தேய்வு செய்துள்ள ரூபா 32,187,826 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (PPE) தற்போதும் பாவனையில் உள்ளன. மொத்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் (PPE) 72.96 சதவீதத்தினை இது குறிக்கின்றது. எனினும் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலத்தினை மீள் மதிப்பீடு செய்வதன் மூலம் பின்னோக்கிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை. | மொத்தமாக பெறுமானத்தேய்வடைந்த சொத்துக்களில், 75.45 சதவீதமான (ரூபா 24,287,000) முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த மோட்டார் வாகனத்தினை பிரதிபலிக்கின்றது. பராமரிப்பு கிரயங்கள் அதிகமாகையால் பயன்தரு ஆயுட்கால முடிவின் பின்னர் அனைத்து மோட்டார் வாகனங்கிளினை விற்பனை மற்றும் மீள்கொள்வனவு செய்தல் என்பன கொவிட் 19 இற்கு முன்னர் காணப்பட்ட கம்பனியின் கொள்கையாக இருந்தது. ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக விற்பனை மற்றும் கொள்வனவு செய்தலில் சாத்தியக்கூறுகள் இல்லை. தேவையானவற்றை மேற்கொள்வதற்காக நாட்டின் பொருளாதாரம் சீராகும் வரை நாங்கள் காத்துக்கொண்டிருக்கின்றோம். | நடைமுறை சந்தைப் பெறுமதி அல்லது இச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தினை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் இச்சொத்துக்களின் பெறுமதியினை மீள்மதிப்பீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனியின் கடன் கொள்கையின் பிரகாரம் அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபன வாடிக்கையாளர்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச கடன் காலமாக முறையே 60 நாட்கள், 30 நாட்கள் மற்றும் 15 நாட்கள் அனுமதிக்கப்படுவதுடன் அதிகபட்ச கடன் நீடிப்பு 10 நாட்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாடிக்கையாளர் வகையிலுள்ள நிலுவை கடன்பட்டோர் மீதியினை பகுப்பாய்வு செய்யும் போது அனுமதிக்கப்பட்ட கம்பனியின் கடன் காலத்தினை விட சில நிலுவைகள் விஞ்சியிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே நிர்ணயிக்கப்பட்ட கடன் காலப்பகுதிக்குள் நிலுவைக் கடன்பட்டோர் மீதியினை கம்பனியினால் மீளப்பெறமுடியவில்லை என அவதானிக்கப்பட்டது. மொத்த நிலுவைக் கடன்பட்டோர் மீதியின் வயதுப் பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது. | கம்பனி அனுமதிக்கப்பட்ட கடன் காலப்பகுதிக்குள் கடன்பட்டோர் நிலுவைகளை மீளப்பெறுவதற்கு அனைத்து சாத்தியமான அளவீடுகளை எடுக்கின்றது. ஆனால், சில சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபன நிறுவனங்கள் என்பவற்றுடன் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ளும் போது கொடுப்பனவின் மேலதிக தாமதங்களுக்கான காரணங்களை அவர்கள் வழங்குகிறார்கள். அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபன நிறுவனங்கள் மீது தேவையற்ற அழுத்தம் காரணமாக பயணம் மற்றும் சுற்றுலா ஒரு தவிர்க்கமுடியாத கடன் சார்ந்த சந்தையாக உள்ளது. அவர்களுக்கு பல்வேறு பயண மற்றும் சுற்றுலா கம்பனிகளுடன் தொடரவும் கையாளவும் வாய்ப்புக்கள் உண்டு. எமது வழங்குனர்களுக்கு உரிய நேரத்திற்குள் கொடுப்பனவு செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக கம்பனிக்குள் சிறிய நித்ப்பாய்ச்சலினை பேணும் நோக்கில் கம்பனியினுள் காணப்படும் கடன் கொள்கையினை கடைப்பிடிக்குமாறு ஊழியர்களுக்கு எப்போதும் அறிவுறுத்தப்படுகிறது. | கம்பனியின் கடன் கொள்கையின் பிரகாரம் கடன் காலப்பகுதிக்குள் பெற வேண்டிய மீதிகளை மீளப்பெறுவதற்காக சகல முயற்சிகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. இதே போன்று கம்பனியின் தொழிற்படு மூலதனத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீண்ட கால நிலுவைகளை மீளப் பெறுவதற்காக புதிய தந்திரோபாயங்களை அறிமுகம் செய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |

| வாடிக்கையாளர் வகை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (ரூபா 000') | | | | மொத்த நிலுவையின் % ஆக நிலுவை |
|---|---|---|---|---|---|
| | 0-180 நாட்கள் | 181-360 நாட்கள் | 360 நாட்களுக்கு மேற்பட்டது | மொத்தம் | |
| அரசாங்கம் | 55,501.6 | 136.9 | 11,476.1 | 67,114.6 | 49 |
| கூட்டுத்தாபனம் - ஏனையவைகள் | 32,907.3 | 302.3 | 6,442.6 | 39,652.2 | 29 |
| தனி நபர்கள் | 16,321.7 | 1,569.7 | 13,119.0 | 31,010.4 | 22 |
| மொத்தம் | 104,730.6 | 2,008.9 | 31,037.7 | 137,777.2 | 100 |

(ii) ரூபா. 137,777,247 மொத்த நிலுவைக் கடன்பட்டோர் மீதியில், ரூபா. 104,730,618 அல்லது 76 சதவீதமானவை 180 நாட்கள் வரை நிலுவையாக உள்ளதுடன் ரூபா. 31,037,691 அல்லது 23 சதவீதமானவை 360 நாட்களுக்கு மேலாக நிலுவையாக உள்ளது. இது கம்பனியின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பாதகமாக பாதிக்கலாம்.

(iii) ரூபா. 137,777,247 மொத்த நிலுவையில், ரூபா. 67,114,596 அல்லது 49 சதவீதமானவை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையாகும். கம்பனி 60 நாட்கள் அரச நிறுவனங்களுக்கு அனுமதித்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பெற வேண்டியவைகளில் ரூபா. 11,613,008 அல்லது 17.3 சதவீதமானவை 181 நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ளது.

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 31 திசெம்பர் 2022 இல் உள்ளவாறு பின்வருவன நீண்டகாலமாக நிலுவையாக உள்ள செலுத்த வேண்டிய மீதிகளாக அவதானிக்கப்பட்டதுடன் இந் நீண்ட காலமாக நிலுவையாக உள்ள மீதிகளை அகற்றுவதற்கு கம்பனியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | **வங்கியினால் அடையாளம் காணப்படாத கடன்**<br>கொவிட் 19 இற்கு பின்னர் பல பிரயாணிகள் கம்பனியின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடி மாற்றங்களை பயன்படுத்தி நிதியினை மாற்றுகின்றனர். பிரயாணி அல்லது விற்பனை ஊழியர் கொடுப்பனவு பரிமாற்றத்தை உறுதிப்படுத்தும் உரிய சான்றுடன் உறுதிசெய்யும் வரை எவ்வித பரிமாற்றங்களினையும் தீர்ப்பனவு செய்யக்கூடாது என காசாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பிரயாணி இதனை உறுதிப்படுத்துவதற்கு கால அவகாசம் காணப்படுகிறது. அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட போதிலும் நடைமுறை விடயங்கள் காரணமாக இதனை கட்டுப்படுத்த முடியாதுள்ளது. 05 வருடங்களுக்கு பின்னர் சபையின் அங்கீகாரத்துடன் மீதிகளானது கம்பனியின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>**பயன்படுத்தப்படாத விமானச் சீட்டு மீளளிப்பு**<br>மீளளிக்கப்படும் என்பதன் பிரகாரம் நாங்கள் இத்தொகையினை விமான நிலையம் மூலம் பெற்றதுடன் இன்று வரை பிரயாணியிடமிருந்தோ, ஊழியரிடமிருந்தோ எவ்வித வேண்டுதலும் கிடைக்கவல்லை. 05 வருடங்களுக்கு பின்னர் சபையின் அங்கீகாரத்துடன் மீதிகளானது கம்பனியின் | நீண்ட காலமாக நிலுவையிலுள்ள மீதிகளை அகற்றுவதற்கு தேயைான அடிப்படைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| வங்கியினால் அடையாளம் காணப்படாத கடன் | 2,636,395 |
| பயன்படுத்தப்படாத விமானச் சீட்டு மீளளிப்பு | 35,700 |
| ஊழியரிடமிருந்து கிடைத்த மீளளிக்கத்தக்க வைப்பு | 25,000 |
| ஏடிஎம் (ADM) தொங்கல் | 818,673 |
| **மொத்தம்** | **3,515,768** |

| | | | |
|---|---|---|---|
| | | வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>**ஊழியரிடமிருந்து கிடைத்த மீளளிக்கத்தக்க வைப்பு**<br>மீளளிக்கத்தக்க வைப்பு என்பதன் பிரகாரம் கம்பனி காசாளரால் ரூபா 25,000 செலுத்தப்பட்டுள்ளது (பாதுகாப்பு நோக்கம்). கம்பனியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் அவளுக்கு இத்தொகை செலுத்தப்படும்.<br><br>**ஏடிஎம் (ADM) தொங்கல்**<br>சில சந்தர்ப்பங்களில் விமான நிலையங்கள் கட்டண விதிகளின் பிரகாரம் அறவிடுவதில்லை. இதனால் அவர்கள் சில விமான சீட்டுகளுக்காக குறைந்த தொகையினை அறவிடுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் மீண்டும் கொடுப்பனவை மீள அறவிடுவார்கள் என்பதனால் கம்பனி வேறுபடும் தொகையினை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பேணும். பெரும்பாலும் நாங்கள் ஒரு வருட காலப்பகுதிக்குள் ஏடிஎம் (ADM) எதனையும் பெறவில்லையாயின் இத்தொகையானது ஏடி (AT) கொள்வனவு கணக்கிற்கு பொது முகாமையாளர் அல்லது உயர் நிறைவேற்று உத்தியோகத்தரின் (GM/CEO) அனுமதியுடன் மாற்றப்படும். | |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் செலுத்த வேண்டிய வியாபார மீதி ரூபா 51,376,877 ஆகும். இது 0 நாட்கள் தொடக்கம் 360 நாட்களுக்கு மேல் நீண்ட காலமாக செலுத்த வேண்டிய நிலுவைகளை இது உள்ளடக்கிறது. நீண்ட காலமாக நிலுவையாக உள்ள மீதிகளை அகற்றுவதற்கு கம்பனியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கம்பனி செலுத்த வேண்டிய வியாபார மீதியின் வயதுப் பகுப்பாய்வு கீழே வழங்கப்பட்டுள்ளது. | நாங்கள் கொடுப்பனவை செலுத்துவதற்காக பட்டியலை அனுப்புமாறு கூறிய போதிலும் இது வரை செலுத்த வேண்டிய சில வியாபார மீதிகளை செலுத்துமாறு எங்களுக்கு கோரிக்கையிடப்பில்லை. நடைமுறையில் இது போன்ற சந்தர்ப்பங்களின் போது இச்செலுத்த வேண்டிய வியாபார மீதிகளை 05 வருடங்களுக்கு பேணுவதுடன் குறிப்பிட்ட உறுதிப்படுத்தலின் பிற்பாடு சபை அங்கீகாரத்துடன் வருமானக் கணக்கிற்கு இவைகள் மாற்றப்படும். | நீண்ட காலமாக நிலுவையிலுள்ள மீதிகளை அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| நாட்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|
| 0-90 | 50,024,617 |
| 91-180 | 712,727 |
| 181-270 | 86,634 |
| 271-360 | 19,989 |
| > 360 | 532,910 |
| **மொத்தம்** | **51,376,877** |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 48.6 மில்லியன் தொகை இலாபமாக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 39.7 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எனவே நிதி விளைவானது ரூபா 88.3 மில்லியன் தொகையினால் முன்னேற்றமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. பொது அனுமதிச்சீட்டு, வெளிச்செல்லும் சுற்றுலா மற்றும் ஹோட்டல் தங்குமிடம் என்பவற்றின் அதிகரிப்பு காரணமாக வருமானம் 242.58 சதவீதத்தினால் அதிகரித்தமை, ஏனைய வருமானம் 262.26 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் விநியோக செலவினங்கள் 74.06 சதவீதத்தினால் குறைவடைந்தமை என்பன இம்முன்னேற்றத்துக்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டுத் தொகை அதிகரிப்பு / வீழ்ச்சி (ரூபா 000') | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வருமானம் | 97,386 | 242.58 | மீளாய்வாண்டின் போது அனுமதிச்சீட்டு வருமானம், வெளிச்செல்லும் சுற்றுலா மற்றும் வெளிச்செல்லும் ஹோட்டல் தங்குமிடம் என்பவற்றின் விற்பனை அதிகரித்தமையே வேறுபாட்டிற்கான பிரதான காரணமாகும். இதே போன்று 2021 ஆம் ஆண்டின் போது பூச்சியமாக காணப்பட்ட தம்படிவ சுற்றுலா வருமானம் அதிகரித்தமையுமாகும். |
| ஏனைய வருமானம் | 13,158 | 262.26 | விசா சேவையின் அதிகரிப்பு மற்றும் ஏனைய வருமானத்தின் அதிகரிப்பு என்பன இதன் பிரதான காரணமாகவும். |
| தேறிய நிதி வருமானம் | 10,480 | 308.32 | வங்கி வைப்புக்களின் மீது பெற்ற உயர் வட்டி வருமானம் |
| வியாபார பெறுவனவுகளின் பதிவளிப்பு ஏற்பாட்டினை திரும்பல் செய்தல். | 12,951 | 100.0 | ஏற்கனவே ஏற்பாடொன்றை மேற்கொள்ளப்பட்ட கடன்பட்டோர்களிடமிருந்து பணம் பெறப்பட்டமை |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருட காலப்பகுதிகளுக்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | | |
| நடைமுறை விகிதம் | 3.0 | 2.5 | 4.5 | 3.5 | 4.0 |
| மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 0.62 | 0.54 | 0.61 | 0.6 | 0.67 |
| **செயற்பாட்டு விகிதங்கள்** | | | | | |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 19 | 7 | 4 | 13 | 14 |
| கடன்பட்டோர் புரள்வுக் காலம் (நாட்கள்) | 19 | 52 | 84 | 28 | 27 |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | | |
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 1.85 | (5.96) | (18.8) | 1.57 | 1.77 |
| **செயல்திறன் விகிதங்கள்** | | | | | |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (சதவீதம்) | 25.53 | (24.90) | (31.13) | 11.48 | 12.17 |
| மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 15.18 | (13.68) | (19.99) | 7.37 | 8.92 |

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது திரவத்தன்மை விகிதங்கள் சிறிதளவில் அதிகரித்துள்ளது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போதான கடன்பட்டோர் புரள்வு விகிதம் மற்றும் கடன்பட்டோர் புரள்வுக் காலம் முன்னேறியுள்ளது.

(iii) நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய் சூழ்நிலைகளுக்கு பின்னர் சுற்றுலாத் துறை படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதனால் கடந்த நான்கு வருடங்களை விட உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) மற்றும் மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) விகிதங்கள் நேர் பெறுமதியினை காட்டுகின்றன.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2006 ஆம் ஆண்டின் 4.2 ஆம் பிரிவின் பெறுகை வழிகாட்டி கையேட்டின் பிரகாரம் ஒரு நிறுவனம் குறைந்தபட்சம் மூன்று வருட காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கான பெறுகை திட்டமொன்றினை தயரிரித்துக்கொள்ளல் வேண்டும். இது உரிய நேரத்தில் பெறுகை நடைமுறையை பூர்த்தி செய்வதனையும், உருப்படிகளினை கொள்வனவு செய்வதற்காக சிறந்த சந்தைப் பெறுமதியினை | நிறுவனத்தின் பருமனுக்கு அமைய கம்பனி பெறுகை தேவைப்பாடுகள் மிகவும் குறைவாகும். கம்பனிக்கு பாரியளவிலான பெறுகை உருப்படிகள் இல்லை. ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் எழுதுகருவிகள், டோனர்ஸ், மைகள் போன்ற உருப்படிகளிற்கான விலையினை உள்ளடக்கி விலைமனுக்கள் கோரப்பட்டு, தரமான உற்பத்தி பொருட்களை வழங்கும் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படுவர். உருப்படிகளிற்கான பெறுகை செயன்முறைக்கு | பெறுகை செயன்முறையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பெறுகை நடைமுறை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நடைமுறை திட்டமொன்றினை தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்வதனையும் நிச்சயிக்கும். எனினும் கம்பனியினால் 2022 ஆம் ஆண்டிற்கான அவ்வாறான திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான 03 விலைமனுக்கள் கோரப்பட்டு, பெறுகைக் குழுவிடம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். இது செயலாளரினால் குறிக்கப்படும் அல்லது நிறுவனத்னுள் காணப்படும் ஊழியரிடம் பெறுகை கூட்டத்தினை குறித்துரைப்பதற்காக ஒப்படைக்கப்படும். கம்பனிக்கான பெறுகை செயன்முறையானது சபையிடம் ஒப்படைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். | |
| (ii) | 2006 ஆம் ஆண்டின் 2.11.3 ஆம் பிரிவின் பெறுகை நடைமுறை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் குழு கூட்டங்களின் நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் சமூகளித்த உறுப்பினர்களால் உறுதிப்படுத்தப்படலும் வேண்டும். எனினும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் கம்பனியின் பெறுகைக் குழு கூட்டங்களின் குறிப்புக்கள் முறையாக தயாரிக்கப்படவில்லை. | கருத்துரைக்கப்படவில்லை. | பெறுகைக் குழு கூட்டங்களின் குறிப்புக்கள் முறையாக தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனியிடம் மனித வள தொழிற்பாடுகளினை சீராக செயற்படுத்துவதற்கு தேவையான அங்கீகரிக்கப்பட்டதொரு ஆட்சேர்ப்புத் திட்டம், அங்கீகரிக்கப்பட்டதொரு சம்பள கட்டமைப்பு மற்றும் படிகள் காணப்படவில்லை. | பயண மற்றும் சுற்றுலா கம்பனிகள் குறிப்பிட்ட திணைக்களங்களிற்கான பதவிகளுக்கு நிலையான ஊழிய ஒதுக்கீட்டினை கொண்டிருப்பதில்லை. பெரும்பாலான பயண மற்றும் சுற்றுலா கம்பனிகள் அந்தக் கம்பனியினால் பெறப்பட்ட வணிக பருமனை அடிப்படையாகக் கொண்டே ஊழியர்களினை ஆட்சேர்ப்பு செய்கின்றன. தற்போதுள்ள ஊழியர்களைக் கொண்டு நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யக்கூடியவாறு இருக்குமானால் பெரும்பாலான சந்தர்ப்பங்களின் போதும் ஊழியர் பதவி விலகல் உடனடியாக சுற்றுலா கம்பனிகளினால் நிரப்பப்படுவதில்லை. வணிக விரிவுபடுத்தலுடன் கூடிய பயண மற்றும் சுற்றுலா கம்பனிகள் அவ்வணிக விரிவுபுடுத்தலுக்கு தேவையான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வர். பயண மற்றும் சுற்றுலா துறையில் உள்ள கம்பனிகள் தனியான குறிப்பிட்ட | கம்பனிக்கானதொரு எஸ்ஓஆர் மற்றும் சம்பளக் கட்டமைப்பு என்பவற்றை தயாரிப்பதற்கும், கம்பனியின் மனித வள தொழிற்பாடு சீராக நடைபெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களினை பின்பற்றுவதற்கும் பரிந்துரைக்கப்படுகின்றது. |

பதவிகளுக்காக நிலையான ஒதுக்கீட்டை கொண்டிருப்பதில்லை.

கம்பனி சபைக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற தந்திரோபாய திட்டத்தில் கம்பனியினது ஆட்சேர்ப்பு செயன்முறை காணப்படுவதுடன் உங்களது எளிதான விளக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட செயன்முறையின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு I, பக்க இல. 23 ). சகல ஊரியர்களின் சம்பளம் மற்றும் படிகள் துறைகளில் காணப்படும் நியமங்களினை அடைந்து கொள்வதற்கான அங்கீகாரத்தினை அல்லது பரிந்துரைகளினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் திருத்தப்படுவதுடன், இவைகள் அங்கீகாரத்திற்காக வருடாந்தம் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் சபையிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.
திருத்தத்தமொன்றில் கட்டமைப்பு வழிகாட்டல் திட்டம் தேவைப்படும் போது ஊழியர் சம்பளத்திற்கான சம்பள கட்டமைப்பு வழிகாட்டல் திட்டமொன்றும் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். (பின்னிணைப்பு II)